மத்திய மாகாண சபை - 2025

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய மாகாண சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2026 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 யூன் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு மே 10 ஆந் திகதிய 265/2018 ஆம் இலக்க திறைச்சேரிச் செயலாளரின் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 02 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரச துறையின் நிதிப் பகுப்பாய்வு, திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு வசதியளிப்பதன் மூலம், தரமான நிதிக் கணக்கீடு மற்றும் அறிக்கையிடலுக்கான கட்டமைப்பு ஒன்றை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் வழங்குவதால் அதன் 03 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நியமங்களை மத்திய அரசு மற்றும் மாகாண சபைத் நிறுவனங்கள் அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டு முறையைப் பயன்படுத்துவதற்குத் திணைக்களத் தலைவர்கள் ஊக்குவிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 08 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இதுவரை மத்திய மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுத் திறைச்சேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் அட்டுறு அடிப்படையில் கணக்குகளைத் தயாரிப்பதற்கான அவசியமான ஆலோசனைகளும் வடிவங்களும் வழங்கப்பட்டதன் பின்னர், மத்திய மாகாணத்திற்குள் அட்டுறு அடிப்படையில் கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க, இலங்கை பொதுத் துறை இணங்க அட்டுறுடு அடிப்படையிலான கணக்கீட்டு முறையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மத்திய மாகாண பிரதி பிரதம செயலாளரின் நிதி முகாமைத்துவ சீபீசீ/சீஎஸ்/7/7/1-(61) இலக்கமும் 2025 ஜனவரி 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சொத்துக்களைக் கணக்கீடு செய்வது தொடர்பாக குறித்த வழிகாட்டற் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில், ஒரு அமைச்சு, ஆளுநர் செயலகம் மற்றும் 06 திணைக்களங்களால் ஆதனங்கள், பொறிகள், இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா. 619,575,993 செலவினமும், பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் 08 திணைக்களங்களால் பெறுமதி மதிப்பிடப்படாத 128 காணித் துண்டுகள், 146 கட்டிடங்கள், 17 உத்தியோகபூர்வ | 2026 ஆம் ஆண்டில் கணக்கில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாகாண கல்வி திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதியை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டதன் பின்னர், அந்த அறிக்கைகளுடன் ஒப்பிட்டு அதற்கேற்ற பொருத்தமான சரிசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக | நிறவனத்திற்குச் சொந்தமான அனைத்தச் சொத்துக்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குடியிருப்புக்கள், 05 வாகனங்கள் ஆகியவற்றுடன், ரூபா 104,936,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 1 ரூட் 22 பேர்ச் காணி ரூபா 6,700,000 பெறுமதியான வாகனமொன்று, ரூபா 1,986,943 பெறுமதியான ஏனைய 03 சொத்துக்கள் ஆகியனவும் மாகாண சுகாதார அமைச்சு மற்றும் அதற்குச் கீழ் இயங்கும் 03 திணைக்களங்களின் 206 நிறுவனங்கள் நடாத்திச் செல்லப்படும் காணிகள் மற்றும் 123 நிறுவனங்களில் இயங்கும் கட்டிடங்கள், மாகாண கல்வி திணைக்களத்திற்குச் சொந்தமான 15 வலயக் கல்வி அலுவலகங்கள், 40 கோட்டக் கல்வி அலுவலகங்கள், 1455 மாகாண சபை பாடசாலைகள், குருதெனிய மற்றும் ஹட்டன் சீடா வள நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மற்றும், 02 உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2014 ஆம் ஆண்டில் ரூபா 8,865,000 செலவிடப்பட்டு மாகாண சபை வளாகத்தில் பொருத்தப்பட்ட 45 கிலோவாட் கொள்ளளவு கொண்ட கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மின் அலகுக் அமைப்பின் பெறுமதி, நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்ற தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க் வில்லை. அத்துடன், இந்த மின் பிறப்பாக்கி செயற்பாடற்றதாக மாறியதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஏற்பட்டுள்ள இழப்பாகக் கணக்கிடப்பட்டிருந்த ரூபா 8,043,130 நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டி ருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் அத்தகவல்களை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக | நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நிதிப் பெறுபேறுகளும் நிதி கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட மத்திய மாகாண சபையின் வருமானக் கணக்கின் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 13,126,502 ஆக இருந்திபெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக, திணைக்களத் தலைவர்கள், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதாக. | அனைத்து நிலுவை வருமானங்களையும் இனம் கண்டு கணக்கில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் சொத்துகளைப் பறிமாற்றம் செய்வதன் மீதான முத்திரை வரி வருமானமாக வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 1,005,213,326 தொகை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் அதனை இனங்கண்டு சீராக்கங்களைச் செய்துள்ளமைக்கான சான்றுரீதியான் தகவல்கள் மற்றும் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் நிதியல்லாத சொத்துகள் பற்றிய கூற்றில் மீளாய்வாண்டில் ஆரம்ப மீதியுடன் சேர்த்தல்கள் ரூபா 45,393,630 உம், கையேற்றல் ரூபா 86,562,708 உம், பௌதிக மாற்றங்களாக ரூபா 5,601,080 உம் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்று ரீதியான விடயங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நொத்தாரிகளுக்கும் மாகாண வருமானத் திணைக்களத்திற்கும் முத்திரை வரி வருமானத்தைச் சேகரிப்பது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேகரிப்புகள் மற்றும் மாற்றங்கள் கல்வி வலய மட்டத்தில் இடம்பெற்றுள்ளதுடன், அவற்றை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ளதாக. | சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்களுடன் தொடர்புடைய சான்றுகளைப் போதுமானளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மத்திய மாகாண சபையின் வருமானக் கணக்கின் நிலுவை வருமானங்கள் பற்றிய கூற்றின் பிரகாரம், அரசாங்க காணிச் சட்டத்தின் கீழான கையளிப்புக் கட்டணங்கள் மற்றும் குத்தகை வாடக வருமானத் தலைப்பின் கீழ் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியானது ரூபா 179,762,150 ஆக இருந்த போதிலும், முன்னைய ஆண்டின் இறுதி மீதியானது ரூபா 122,693,096 ஆகக் காணப்பட்டமையினால் ரூபா 57,069,054 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான பிழைகளைத் தவிர்த்து, சரியான முறையில் மதிப்பீடுகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அனைத்துப் பிரதேச செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக. | சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>--- |
| (எ) | மாகாண நிர்வாகப் பிரிவின் முன்பணக் கணக்குகள் பற்றிய கூற்றின் படி, 4 பிரதேச செயலகங்களின் கட்டுநிதி பெறுவனவுகளிலும், 3 பிரதேச செயலகங்களின் கட்டுநிதி தீர்வு செய்தல்களிலும் மற்றும் மாதாந்த கணக்குச் பொழிப்பின் படி முறையே ரூபா 4,102,316 மற்றும் ரூபா 4,151,539 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | சரியான மதிப்பீடுகளைக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு மீளச் சமர்ப்பிப்பதற்கான உரிய மாதிரிப் படிவங்கள் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | சரியான தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட சீராக்கங்களைச் செய்து கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மாகாண நிர்வாகப் பிரிவின் தலவாக்கலை பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு பற்றிய கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதிக்குரிய மீதிக்கும் திறசேரி | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அச்சிடப்பட்ட குறிப்புக்கும் இடையில் ரூபா 1,445,711 இன் வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஐ) | மாகாண நிர்வாகப் பிரிவின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் படி, வேறு வருமானத் தலைப்பு களுக்காகச் சேகரிக்கப்பட்ட வருமானம், பொது வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள், விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்பு வரவுகள் மற்றும் வேறு செலவினத் தலைப்புகளுக்காகப் பணம் செலவிடப்பட்டதன் கூட்டுத்தொகை ரூபா 3,057,649,485 ஆக இருந்த போதிலும், திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்புகளின் படி அதன் கூட்டுத்தொகை ரூபா 3,113,233,424 ஆகக் காணப்பட்டமையினால் ரூபா 55,583,939 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சரியான பெறுமதிகளைக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு மீளச் சமர்ப்பிப்பதற்கான சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவங்கள் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | எதிர்காலத்தில் சரியான தகவல்களின் அடிப்படையில் உரிய சீராக்கங் களைச் செய்து கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மாகாண நிர்வாகப் பிரிவின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதிச் சீராக்கல் கூற்றின் படி, வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல்கள், ஏனைய தலைப்புகளுக்காக அறிக்கையிடும் நிறுவனம் செய்த செலவு மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,467,235,250 ஆகக் காணப்பட்ட போதும், திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்புகளின படி அவ்மதிப்பானது ரூபா 2,471,701,794 ஆக இருந்தமையினால் ரூபா 4,466,544 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | மாகாண நிர்வாகப் பிரிவினால் 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயவாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதிக்குரிய திறைசேரிக்கான அனுப்புதல்கள் ரூபா 2,057,959,393 எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கட்டுநிதி கணக்குகள் பற்றிய கூற்றில் அது ரூபா 2,056,598,084 எனக் குறிப்பிடப் பட்டுள்ளமையினால், நிதிச் செயவாற்றல் கூற்றின் பிரகாரம் முற்பணச் செலுத்துதல்கள் ரூபா 1,361,309 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது | நிதிச் செயவாற்றல் கூற்றிலும் கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான கூற்றில் உள்ள திறைசேரிக்குப் பணத்தால் தீர்வு செய்தலிலுள்ள வித்தியாசத்திற்குக் காரணம், கங்கவட்டகோரள மற்றும் தெல்தொட்ட பிரதேச செயலகங்களிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவல்களில் உள்ள வேறுபாடுகள் என்பதாக. | - மேற்படி – |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மாகாண நிர்வாகப் பிரிவினால் 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் படி திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி ரூபா 2,011,348,043 ஆகக் காணப்பட்ட போதிலும், கட்டுநிதி கணக்குகள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ் பணத்தினால் தீர்வு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,056,598,084 ஆக இருந்தமையினால், காசுப் பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதிச் தீர்ப்பனவுகள் ரூபா 45,250,041 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கங்கவட்டகோரள, வலப்பனை மற்றும் டெல்தொட்ட பிரதேச செயலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் படி திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி மற்றும், கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ் அந்த பெறுமதிகளுக்கு இடையில் உள்ள வேறுபாடு காரணமாக ரூபா 45,250,041 ஆன வித்தியாசம் ஏற்பட்டுள்ளதாக . | சரியான தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட சீராக்கங்களைச் செய்து கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | பிரதான செயலக அலுவலகத்தினால் 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அவசர சந்தர்ப்ப நிதியக் கணக்கில் , 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வட்டியின் பெறுமதி ரூபா 726,914 ஆக இருந்த போதிலும், மாகாண சபையின் இறுதிக் கணக்கின் நிதி நிலைமை கூற்றில் அது ரூபா 3,836,827 என குறிப்பிடப்பட்டு பெற வேண்டிய வட்டியின் பெறுமதி ரூபா 3,109,913 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | இத்தகவல்களைக் திறைசேரி கணினித் தரவு முறைமைக்குள் உள்ளீடு செய்யும் போது, அவசர சந்தர்ப்ப நிதியத்தின் முதலீட்டு பெறுமதி 9-99-3 எனும் குறியீட்டு இலக்கத்தின் கீழேயே மேற்கண்ட வட்டியும் சேர்த்து உள்ளடக்கப்பட்டுள்ளதால், முதலீட்டு பெறுமதியும் வட்டி வருமானமும் ஆகிய இரண்டின் கூட்டுத்தொகையும் பெற வேண்டிய வட்டி வருமானமாக நிதி நிலைமை கூற்றில் பதிவாகியுள்ளமையினால் இத்தவறு இடம்பெற்றுள்ளதாக | - மேற்படி – |

### 1.2.2. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாகாண வீடமைப்புத் திணைக்களத்தினால் 2005 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 11.25 மில்லியன் மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட ரூபா 3.75 மில்லியன் என மொத்தம் ரூபா 15 மில்லியனைக் கொண்டு பிராந்திய அபிவிருத்தி வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘சஹன் பியச’’ சுழற்சி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி இல் உள்ளபடியான வங்கி மீதி ரூபா | எதிர்காலத்தில் வங்கியிடமிருந்து தகவல்களைப் பெற்றுச் சமர்ப்பிப்பதாக தெரிவிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்படும் கணக்குத் தகவல்கள் தொடர்பான சான்றுகளைப் போதுமானளவு கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4,996,331 ஆகவும் கடன் மீதி ரூபா 8,068,490 ஆகவும் மொத்தம் ரூபா 13,064,821 ஆன நிதி மீதியொன்றாகக் காணப்பட்டது. அதற்கமைய, சுழற்சி நிதியத்தின் மீதி ரூபா 1,935,179 இனால் குறைவடைந்தமை தொடர்பில் போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் விடுபட்டுள்ளனவா என்பதற்கான எனது அபிப்பிராயத்தை நியாயமான உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்..

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்க்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

## 1.5.1 தலைப்பு – 542 மத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்

### 1.5.1.1 வெளிப்படையான மோசடிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ | திறைசேரிச் செயலாளரினால் 2024 திசம்பர் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட 05/2024 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு அமைவாக, மத்திய மாகாண சபையின் பொறுப்பில் இருந்த அதிக செலவின பொறுப்பினைக் கொண்ட ஆடம்பர வாகனங்களை அரசின் கேள்வி நடைமுறைக்கு ஏற்ப அகற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீட்டுக் குழுவில் நிலவிய சிக்கல்களைக் கணக்காய்வு சுட்டிக்காட்டியதன் காரணமாக, அவ்வாகனங்களை மீண்டும் மதிப்பீடு செய்வதற்காகப் புதிய மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.<br><br>அக்குழுவினால் வழங்கப்பட்ட புதிய மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் அடுத்த கையகற்றல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்ட 05 ஆடம்பர வாகனங்களின் புதிய மதிப்பீட்டுப் பெறுமதியானது, ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதியை விட ரூபா 140,800,000 இலிருந்து ரூபா 187,350,000 வரை, ரூபா 46,550,000 இனால் அதிகரித்திருந்தது. அதற்கமைய, வாகனங்களுக்காக ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டிருந்த மிக உயர்ந்த ஏல விலைகளின் அடிப்படையில் அவற்றை அகற்றுவதற்கு கேள்விக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், முறைகேடொன்று ஏற்படுவதற்குச் சாத்தியம் காணப்பட்டது. | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட்டு, புதிய மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு விலைகள் ஆரம்ப மதிப்பீட்டு விலைகளை விட உயர் பெறுமதியுடையதாக இருந்தமையினால், அவ்வாகனங்கள் அடுத்த கையகற்றல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக. | மதிப்பீட்டுக் குழுக்களை நியமிக்கும் போது தொழில்நுட்ப அறிவைக் கொண்ட அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, ஆரம்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கேள்வி மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெறுகை குழு அவ்வாகனங்களை அகற்றுவதற்குத் தீர்மானித்திருந்த மையால் முறைகேடொன்று ஏற்படுவதற்குச் சாத்தியமிருந்தமை தொடர்பில், பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ | மத்திய மாகாண ஆளுநரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த பிராடோ வாகனம் ரூபா 41,600,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மத்திய மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலாளரினால் இவ்வாகனத்தை உத்தியோகபூர்வ வாகனமாகப் பயன்படுத்துவதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டமையால், மத்திய மாகாணப் பிரதம செயலாளரின் CPC/CS/01/11/09/06 ஆம் இலக்க 2026 பெப்ரவரி 23 ஆம் திகதிய கடிதம் மூலம் கொம்ப்ட்ரோலர் ஜெனரலிடமிருந்து அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தும், அதற்கான முறையான அனுமதி கிடைக்கப்பெறாத நிலையில் இவ்வாகனத்தை கையகற்றும் செயன்முறையிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, இவ்வாகனத்தின் புதிய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அமைவாக அதனை அகற்றுவதன் மூலம் அரசாங்கத்திற்குப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ரூபா 41,600,000 தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | பிராடோ வாகனத்தைப் பொது நிர்வாக அமைச்சுக்குக் கையளிக்குமாறு அவ்வமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதுடன், அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், அடுத்த அகற்றல் செயன்முறைக்கு இவ்வாகனத்தைச் முன்வைக்க முடியாதுள்ளதாக . . | முறையான அனுமதியின்றி அகற்றும் செயன்முறையிலிருந்து இவ்வாகனத்தை அகற்றிய பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதோடு, முறையான வகையில் வாகனம் கையகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.2 தலைப்பு 546 – மத்திய மாகாண வருமானத் திணைக்களம்**

**1.5.2.1 வருமானத் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி சாசனம் மற்றும் 1992 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் திருத்திய நிதி சாசனத்தின் பிரகாரம் மாகாண வருமானத் திணைக்களத்தினால்1991 முதலட 2910 ஆம் ஆண்டு வரை அறவிடப்படாத ரூபா 15,837,732 ஆன நிலுவை புரள்வு வரியை 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் சேகரிப்பதற்கு தவறியிருந்தது. | 2010 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட யோசனைகள் மூலம் இரத்துச் செய்யப்பட்ட வியாபாரப் புரள்வு வரியின் 2,264 கோப்புகள் தொடர்பில் ரூபா 353,816,460 நிலுவை வரித் தொகை காணப்பட்டதுடன், இந்நிலுவை வரித் தொகையானது 2025 திசம்பர் 31 ஆம் திகதியாகும்போது 75 கோப்புகள் தொடர்பில் ரூபா 15,837,732 வரை குறைக்கப்பட்டுள்ளது. அதில் 5 கோப்புகளுக்கு ரூபா 4,490,048 தொகைக்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், 11 கோப்புகளுக்கு ரூபா 3,878,142 அறவிடப்பட்டு வருகின்றது என்றும், 59 கோப்புகளுக்குரியதாக ரூபா 7,469,452 பதிவழிக்கும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் | நிதிச் சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.நிதிச் |

| | | |
|---|---|---|
| (ஆ) சொத்துப் பரிமாற்றம்/விற்பனை தொடர்பில் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி தொடர்பாக, மத்திய மாகாணத்தின் 1990 இன் 17 ஆம் இலக்க நிதிச் சாசனத்தின் 73(8) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சொத்து விற்பனை மறுமதிப்பீடுகளுக்கு அமைவாக, 2025 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 70,620,557 முத்திரை வரித் தொகையில், ரூபா 30,130,932 தொகையானது 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், அதனைத் சேகரித்துக்கொள்வதற்கு மாகாண வருவாய்த் திணைக்களம் தவறியிருந்தது. | அறவிடப்பட வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணங்களை அறவிடும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிச் சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 மாகாண மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்**

**1.5.3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் பயணிகள் ஓய்வு விடுதியொன்றைப் பராமரித்துச் செல்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் மூன்று சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப் பட்டிருந்த ஒப்பந்தங்களின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாக, பயணிகள் ஓய்வு விடுதியைக் கட்டுவதற்கான அனுமதி அல்லது கட்டப்பட்ட ஓய்வு விடுதியின் உடமையை வேறொருவருக்கு உப குத்தகைக்கு வழங்குவதோ அல்லது அதன் ஒரு பகுதியை அவ்வாறு குத்தகைக்கு வழங்குவதோ செய்ய முடியாது என இரு தரப்பினரும் உடன்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை 05 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் செய்துகொண்டு, கடுகிதுல பயணிகள் ஓய்வு விடுதியைப் பராமரித்துச் செல்வதற்காக ஏனைய நபர்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 01 இற்கும் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்டகாலமாக மூன்று குத்தகைதாரர்களிடமிருந்து மொத்தமாக ரூபா 5,976,357 குத்தகைக் வாடகைத் தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | முதலாம் தரப்பிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 3,167,023.33 ஐ அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் தரப்பினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 681,634 நிலுவைத் தொகையைத் தவணை முறையில் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாம் தரப்பிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 2,127,700/- தொகை தொடர்பாக மீண்டும் முகாமைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளதாகவும் | உடன்படிக்கையின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாகச் செயற்படுவதோடு, நிலுவைக் குத்தகை வாடகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3.2 பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|
| .மத்திய மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனச் சாசனத்தின் 05 ஆம் பிரிவிற்கு அமைவாக, அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் நிறுவப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | சாசனத்தின் 05 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்றைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 - தலைப்பு 550- மத்திய மாகாண பிரதான அமைச்சு

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணங்கள் 104(4) மற்றும் மாகாண நிதி விதி 54.6 | இழப்பு மற்றும் சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தொடர்புடைய சம்பவங்கள் இடம்பெற்று 03 மாதங்கள் முதல் 26 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி கடந்துள்ள போதிலும், இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறிய 56 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பிரதான மற்றும் கல்வி அமைச்சின் கீழ் 1,500 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் காணப்படுவதினாலும், அந்நிறுவனங்களிலிருந்து அறிக்கையிடப்படும் சம்பவங்கள் அனைத்தும் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான அலுவலர்கள் வரம்புக்குட்பட்ட அளவிலேயே காணப்படுவதினாலும், அவ்வலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் | நிதிப் பிரமாணங்கள் மற்றும் மாகாண நிதி விதிகளுக்கு அமைவாக பரிசோதனை நடவடிக்கைகளை முடிவுறுத்தி அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அதேவேளையில் இவ்விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தமையினாலும், இழப்பு மற்றும் சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ளது.<br><br>எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**1.5.4.2. முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜனாதிபதி செயலகத்தின் தலைமையில் தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி செயற்திட்டத்தின் திட்ட அலுவலகமொன்றைப் பராமரித்துச் செல்வதற்காக, மாகாண பிரதான கல்வி அமைச்சுக்குச் சொந்தமான “மலபார் ஹவுஸ்“ உத்தியோகபூர்வ இல்லமானது மாதம் ரூபா 325,000 வாடகைக்கு, 2019 மார்ச் 15 ஆம் திகதி முதல் 2019 திசம்பர் 22 ஆம் திகதி வரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமத்திய மாகாண ஆளுநருமான ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதிக்காகப் பெறப்பட வேண்டிய ரூபா 2,925,000 வாடகைத் தொகையானது மீளாய்வாண்டின் இறுதிய 06 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தள்ள போதிலும், அதனை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையை அறவிட்டுக்கொள்வது தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறு மாகாணப் பிரதம செயலாளர் ஊடாக ஜனாதிபதிச் செயலாளருக்குக் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வாடகைத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

**1.5.5 மத்திய மாகாண நூலக சேவைகள் சபை**

**1.5.5.1 பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள்நடைமுறைப்படுத்தப்படும் பொது நூலகங்கள், கல்வி நூலகங்கள் மற்றும் விசேட நூலக நடவடிக்கைகளைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு, அறிவு நிலையமாகச் சேவைகளை வழங்குவதற்காக மத்திய மாகாண நூலக சேவைகள் சபை நிறுவப்பட்டு 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு பிரதான மற்றும் கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6 தலைப்பு 551- மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற திணைக்களம்**

**1.5.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| மத்திய மாகாண நிதி விதி 54.6 | பரிசோதனை அறிக்கைகளின் படி பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டு 01 வருடம் முதல் 12 வருடங்கள் வரையிலான காலப்பகுதி கடந்துள்ள 15 சம்பவங்கள் தொடர்பான ரூபா 52,449,600 இழப்பு மற்றும் சேதங்களை உரிய தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு உள்ளுராட்சி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத்தொகையை அறவிட்டுக்கொள்வது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் | மாகாண நிதி விதிகளுக்கு அமைவாக, இழப்பு மற்றும் சேதங்களுக்குப் பொறுப்பான நபர்களிடமிருந்து இழப்புகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்குரிய உள்ளூராட்சி நிறுவனங்களில் இடம்பெற்றிருந்த ரூபா 8,666,576 முறைகேடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை நடத்துவதற்காகக் குழுக்கள் நியமிக்கப்பட்டு 09 மாதங்கள் முதல் ஏறத்தாழ 03 ஆண்டுகள் அண்மித்த வரையிலான காலம் கடந்துள்ள 12 சம்பவங்கள் தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கைகள், மதிப்பாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த் 12 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவ்விசாரணைகளை விரைவாக முடிவுறுத்தி அவற்றுக்குரிய அறிக்கைகளை வழங்குமாறு விசாரணைக் குழுக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | ஆரம்ப விசாரணைகளை உரிய காலத்தில் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற 08 சம்பவங்கள் தொடர்பில் மத்திய மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மிகை அறவீட்டு பெறுமதியில், மேன்முறையீட்டு விசாரணைகள் முடிவடைந்த போதிலும் தீர்மானங்கள் வழங்கப்படாமையினால் 03 சம்பவங்கள் தொடர்பான ரூபா 4,850,710 உம், மேன்முறையீட்டுத் தீர்மானங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரும் அறவிடப்படாதுள்ள 05 சம்பவங்கள் தொடர்பான ரூபா 1,492,365 உம் உள்ளடங்கலாக ரூபா 8,666,576 மீதி நிலவியது. | 2026 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 8,634,826 மேலும் அறவிடப்பட வேண்டியிரந்ததுடன் அம்மிகை அறவீட்டை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் | மிகை அறவீட்டை உரிய காலத்தில் அறவிட்டு ஏற்பட்ட நட்டத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் . |

**1.5.7 தலைப்பு 552 - மத்திய மாகாண கல்வித் திணைக்களம்**

**1.5.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 2022 திசம்பர் 11 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்டசெயற்பாட்டு நடைமுறை விதிக் கோவையின் 125 ஆம் விதி | தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் அக்காலம் நிறைவடைந்த உடனடியாகப் பொருத்தமானவாறு அவரின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு, தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கு அல்லது நியமனத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 07 வலய அலுவலகங்களில் தகுதிகாண் காலம் கடந்து 01 வருடம் முதல் 34 வருடங்கள் வரையிலான காலப்பகுதி கடந்துள்ள போதிலும் 108 அலுவலர்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தரமாக்கப்படாத 108 அலுவலர்களில் 18 பேரின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 90 பேரின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்நிமித்தம் குறித்த 90 அலுவலர்களுக்கும் அவர்களின் தனிப்பட்ட கோப்புகள் ஊடாகத் தொடர்புடைய குறைபாடுகள் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. அக்குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டு நடைமுறை விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வலயக் கல்வி அலுவலகங்களுக்குக் கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கிடைக்கப்பெற்ற 845 முறைப்பாடுகள் மற்றும் பெட்டிஷன் தொடர்பில் விசாரணைச் சபைகள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், விசாரணை நடவடிக்கைகளை நிறைவுசெய்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இம்முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு நிலவும் மனிதவளம் போதுமானதாக இன்மையினாலும், உத்தியோகபூர்வ வேலைப்பளு காரணமாக ஒரே நேரத்தில் 3 உத்தியோகத்தர்கள் பங்கேற்பதில் உள்ள சிரமம் காரணமாகவும் கரிசோதனை செயற்பாடுகளை உரிய நேரத்தில் மேற்கொண்டு இவ்விசாரணை அறிக்கைகளை வழங்குவது தாமதமாகியுள்ளதாக . | . இந்த விசாரணை நடவடிக்கைகளை உரிய காலத்தில் நிறைவேற்றி, அறிக்கைகளை வழங்கி, எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.3 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள செயலாற்றுகை அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்திலிருந்து 05 ஆம் | 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வெட்டுப்புள்ளியைக் கருத்திற் கொள்ளும் போது, தேசிய மட்டத்தில் | மாகாணத்தினுள் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்துவதற்குத் |

| | | | |
|---|---|---|---|
| | தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 40,364 மாணவர்களுள் 5,558 மாணவர்கள், அதாவது 13.77 சதவீதமானோர் வெட்டுப்புள்ளியைத் தாண்டியிருந்ததுடன், அச்சதவீதமானது நாட்டின் ஒட்டுமொத்த சதவீதமான 17.11 ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நாட்டின் 09 மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மத்திய மாகாணம் கடைசி இடத்திலிருந்ததுடன், நாட்டின் 25 மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் முறையே 20, 16 மற்றும் 19 ஆகிய இடங்களைப் பெற்றிருந்தன. | 14.46 சதவீதத்திலிருந்து 13.77 சதவீதம் வரை குறைவடைந்துள்ளமையைக் காட்டுகிறது. இருப்பினும், மத்திய மாகாணமானது அதனை 10.29 சதவீதத்திலிருந்து 13.77 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது. 2020 முதல் 2025 வரை 70 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுவதைக் கருத்திற் கொள்ளும்போது, தேசிய மட்டத்தில் அச்சதவீதம் குறையும் போது மத்திய மாகாணத்திலும் அச்சதவீதம் குறைவடைந்துள்ளது. | தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2025 ஆம் ஆண்டின் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு மத்திய மாகாணத்திலிருந்து 28,681 மாணவர்கள் தோற்றி, 18,083 மாணவர்கள், அதாவது 63 சதவீதமானோர் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றிருந்ததுடன், அது நாட்டின் ஒட்டுமொத்த சதவீதமான 66 ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதத்தின் படி, நாட்டின் 25 மாவட்டங்களுள் மத்திய மாகாணத்தின் நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் முறையே 18, 14 மற்றும் 22 ஆகிய இடங்களைப் பெற்றிருந்தன. | 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்றுக் கொள்வதைக் கருத்திற கொள்ளும் போது, தேசிய மட்டத்தில் 65.98 சதவீதத்திலிருந்து 66.12 சதவீதம் வரை 0.14 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. இருப்பினும், மத்திய மாகாணமானது 63.79 சதவீதத்திலிருந்து 63.05 சதவீதம் வரை, அதாவது 0.74 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2020 முதல் 2025 வரை அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோர் சதவீதத்தைக் கருத்திற் கொள்ளும் போது, தேசிய மட்டத்தில் அவ்மதிப்பானது 8.64 சதவீதத்திலிருந்து 8.72 சதவீதம் வரை 0.08 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. அவ்வாறே, மத்திய மாகாணமும் 8.37 சதவீதத்திலிருந்து 9.37 சதவீதம் வரை, அதாவது 1 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. | மாகாணத்தினுள் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 553 - மத்திய மாகாண காணித் திணைக்களம்

#### 1.5.8.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாணத்தின் 38 பிரதேச செயலகப் பிரிவுகளுள் 35 பிரிவுகளில் மொத்தமாக ரூபா 125,505,050 நிலுவை குத்தகை மீதி அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. அவற்றுள் மொத்தமாக ரூபா 120,427,573 நிலுவை குத்தகை வருமானம் 12 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தவதுடன், அது மொத்த நிலுவை குத்தகை வருமானத்தின் 96 சதவீதமாகும். 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் வருமானக் காலப் பகுப்பாய்வின் படி, மொத்த நிலுவை குத்தகி வருமானத்தில் 48 சதவீதம், அதாவது ரூபா 60,137,125 ஆனது 3 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக நிலுவையில் காணப்பட்டது. | நிலுவை குத்தகை மீதிகளுள் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை ரூபா 15,246,668 அறவிடப்பட்டுள்ளதாகவும், மேலும் ரூபா 110,258,382 அறவிடப்பட வேண்டியுள்ளதாக. | மேலும் நிலுவை குத்தகை மீதிகளை அறவிடுவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வலப்பனை பிரதேச செயலகப் பிரிவின் ராகல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஹேரத்புர ஜனபதய கிராமத்தின் மு.பி.நு. 880 வரைபடத்தின் துண்டு இலக்கங்கள் 01 மற்றும் 02 ஐக் கொண்ட, அளவினால் ஏறத்தாழ 47 பேர்ச் கொண்ட அரச காணித் துண்டுகள் நபர் ஒருவருக்கு வணிக நடவடிக்கைகளுக்காக 2010 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 30 வருட காலத்திற்கும், மேற்கூறப்பட்ட வரைபடத்தின் 03 ஆம் இலக்கம் கொண்ட 0.1012 ஹெக்டேயர் அளவைக் கொண்ட அரச காணித் துண்டு விவசாய நடவடிக்கை களுக்காக 2010 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 30 வருட காலத்திற்கும் குத்தகைக்கு வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், இக்காணிகளிலிருந்து 2026 ஏப்ரல் 02 ஆம் திகதி வரையில் மொத்தமாக ரூபா 33,707,032 நிலுவைக் குத்தகை மீதியொன்று அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | முறையாகக் குத்தகைத் தொகையைச் செலுத்தாமையினால் குத்தகை அனுமதியை இரத்துச் செய்வதற்கு காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், குத்தகை அனுமதி இரத்துச் செய்யப்பட்ட பின்னர் நிலுவைக் குத்தகையை அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தொழுவ பிரதேச செயலகப் பிரிவில் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக 20 நபர்களுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்காக 18 நபர்களுக்கும் என 38 நபர்களுக்கு அரச காணிகளைக் குத்தகைக்கு | 2025 ஏப்ரல் 02 ஆம் திகதி ஒரு குத்தகைதாரரினால் ரூபா 137,280 குத்தகைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகையை அறவிடும் நடவடிக்கைகள் பல்வேறு | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக 1995 ஆம் ஆண்டிற்கும் 2015 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்திருந்தது. இவ்வனுமதி கிடைத்து 10 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், இதுவரை இந்நநபர்களிடமிருந்து காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 ஒக்டோபர் 22 ஆம் திகதியிட்ட 2021/06 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை தீர்மானிக்கப்படா திருந்துடன், மேலும் 06 குத்தகைதாரர்களுக்காக குழுவொன்றினால் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2026 பெப்ரவரி 17 ஆம் திகதி வரை அம்மதிப்பீட்டின் படி மேலும் ரூபா 2,063,000 குத்தகைத் தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | கட்டங்களில் உள்ளதாக. | |
| (ஈ) | கங்கவட கோரளை பிரதேச செயலகப் பிரிவின் பூவெலிகட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வணிக அடிப்படையில் 2002 ஜுலை 01 ஆம் திகதி முதல் 30 வருட காலப்பகுதிக்கு நபர் ஒருவருக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை ரூபா 23,941,440 குத்தகைத் தொகையும், அம்பிட்டிய தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அரச காணியொன்று நலன்புரி நடவடிக்கைகளுக்காக 2021 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 30 வருட காலத்திற்குத் தனியார் தரப்பொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இக்குத்தகைதாரரிடமிருந்து 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை ரூபா 14,750,000 குத்தகைத் தொகையும் ரூபா 1,075,000 வட்டித் தொகையுமாக மொத்தமாக ரூபா 15,825,000 தொகையும் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | பூவெலிகட பிரிவின் குத்தகையை இரத்துச் செய்து பதிவுசெய்வதற்கும், அம்பிட்டிய குத்தகைதாரரின் குத்தகைத் தொகையைத் திருத்துவதற்கு மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய நிலுவைக் குத்தகையை அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ரிக்கில்லகஸ்கட கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஏறத்தாழ | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு காணி ஆணையாளரிடமிருந்து | நிலுவை வருமானத்தை |

| | | |
|---|---|---|
| 0.015 ஹெக்டேயர் கொண்ட அரச காணி வணிக நடவடிக்கைகளுக்காக நபர் ஒருவருக்கு 1995 ஜூன் 15 ஆம் திகதி முதல் 30 வருட காலத்திற்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகைதாரரினால் குத்தகைத் தொகையைச் செலுத்தாததன் பேரில் 2026 ஜனவரி 08 ஆம் வரையில் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 2,142,000 குத்தகை மற்றும் தண்டப் பணத் தொகையும், ரிக்கில்லகஸ்கட கிராம உத்தியோகத்தர் பிரிவில் 0.0183 ஹெக்டேயர் அளவிலான காணித் துண்டு வணிக நடவடிக்கை யொன்றிற்காக நபர் ஒருவருக்கு 1995 ஜூன் 15 ஆம் திகதி முதல் 30 வருட காலம் வரை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டு 2025 ஜூன் 14 ஆம் திகதி வரை ரூபா 5,052,980 குத்தகை மற்றும் தண்டப் பணத் தொகையும் ரூபா 179,960 தவணைத் தொகையுமாக அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. அவற்றுள் 2026 ஜனவரி 07 ஆம் திகதி வரை மேலும் ரூபா 2,553,540 அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | ஆலோசனை கோரியுள்ளதாக. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.8.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பாடசாலைக் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாகக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, மத்திய மாகாணத்திலுள்ள 58 பாடசாலைகளின் காணிகளைச் சுவீகரிப்பதற்காக 22 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 64,725,690 தொகையொன்று அனுப்பப்பட்டிருந்தது. 2025 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை 13 பாடசாலைகளுக்குத் தொடர்பான ரூபா 8,140,346 தொகை திரும்பப் பெறப்பட்டிருந்ததுடன், 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 42,247,719 தொகையிலான 36 பாடசாலைக் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்குப் பொதுவாக ஏறத்தாழ 3-4 வருட காலம் செல்லும் என்றும், 36 பாடசாலைகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது பின் தொடர் கண்காணிப்புகளை மேற்கொண்டு, குறிதத் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

**1.5.9 தலைப்பு 554 - மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

**1.5.9.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2025 மார்ச் 17 ஆம் திகதிய 07/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சி களுக்கான வளவாளர் கொடுப்பனவுகளைச் செலுத்துகையில் ரூபா 1,003,150 தொகை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டமைக்கு அமைவாகவும், 2026 மார்ச் 05 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் குழுவுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறும், இனிவரும் காலங்களில் நிகழ்ச்சிகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளைக் கணிப்பீடு செய்து, அக்கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காகக் கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டியதுடன், சட்டத்திற்கு முரணாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.10 தலைப்பு 556 - மத்திய மாகாண சுற்றுலாத் திணைக்களம்**

**1.5.10.1 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சுற்றுலாத் திணைக்களத்தினால் தம்புள்ளை சுற்றுலா வலையத்திற்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் அப்பகுதியிலுள்ள உள்ளூர் மக்களுக்கும் நன்மைகளை வழங்கும் நோக்கில், 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,948,336 செலவில் ஆயுர்வேத மற்றும் சுற்றுலா வசதிகள் நிலையமொன்றையும் ரங்கிரி தம்புள்ளை ரஜமஹா | இத்திட்டத்தை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்காக தம்புள்ளை மாநகர சபைக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சொத்துக்களைப் பயனுள்ள வகையில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், எதிர்காலத்தில் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| விகாரைக்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்துடன், நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 09 வருட காலம் கடந்துள்ள போதிலும் நோக்கத்திற்பட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | | முன்னர் காணிகளைப் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.11 தலைப்பு 583 - மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம்**

**1.5.11.1 தாமதமான செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுவரெலியா மாநகர சபைக்குச் சொந்தமான சொத்தொன்றாகக் கணக்குகளில் காட்டப்படும் நுவரெலியா சினிசிட்டா உள்ளக விளையாட்டு அரங்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ரூபா 3.1 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திப் செலவின விடயங்களுக்கு அமைவாக நுவரெலியா மாநகர சபையின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் இல்லாத திட்டமொன்றிற்காக, 2026 ஜனவரி 20 ஆம் திகதி பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,031,975 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைத் திகதியான 2026 ஜூலை 21 வரை இத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படக்கூட இல்லை. | “டித்வா“ சூறாவளி காரணமாக சினிசிட்டா உள்ளக விளையாட்டு அரங்க வளாகமானது தங்குமிட நிலையமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட மரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை உரிய பணிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**1.5.11.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்த கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ | முறையான வேலைத்திட்டமும் சாத்திய ஆய்வும் இன்றி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி | “டித்வா“ சூறாவளி காரணமாக இக்கட்டடம் அமைந்துள்ள வளாகம் அதி அபாய வலயமெனப் | சொத்துக்களைப் பயனுள்ள வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | மானியம் மூலம் ஒதுக்கீடுகளைப் பெற்று, மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு ஜூடோ பயிற்சி நிலையமொன்றை அமைக்கும் நோக்கில் கம்பளை மகளிர் பாடசாலையொன்றின் கட்டிடம் ரூபா 1,992,319 தொகையில் புனரமைக்கப்பட்டிருந்த போதிலும், நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாட்டிற்காக இக்கட்டடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெயரிடப்பட்டுள்ளமையினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ளதாக | நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ | திகன விளையாட்டு தொகுதியின் மும்மொழி நிறுவன இணையதளத்தை நிறுவுதல் மற்றும் பராமரிக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,351,750 பெறமானத்திற்குத் தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட திகதியிலிருந்து 15 வார காலப்பகுதிக்குள் விவரக்குறிப்புகளுக்கு அமைவாக அத்தொகுதியை நிறைவுசெய்து கையளிப்பதற்கு விநியோகஸ்தர் ஒப்பந்தத்தின்படி உடன்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 09 ஆம் திகதி வரை முறைப்படி அத்தொகுதியை நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், விவரக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொழிற்படும் நிலையில் இல்லாதிருந்த போது 2024 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1,230,050 தொகையும், இணையவழிக் கொடுப்பனவுத் தொகுதிக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2025 இல் மீண்டும் ரூபா 1,047,500 தொகை அத்தொடர்புடைய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட திகதியான 2025 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் இதுவரை ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், இத்தொகுதியைத் தொழிற்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுவதனால் அதனூடாக உருவாக்கப்படும் தரவுகள் குறித்து நம்பிக்கை வைக்க முடியாதுள்ளதுடன், இத்தொகுதிக்காக 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டுள்ள ரூபா 2,399,250 தொகையானது குறைபயன்பாட்டுச் செலவினமாக மாறியிருந்தது. | முறைமையைச் தொழிற்படுத்தும் காணப்படும் குறைபாடுகள் குறித்து இதுவரை உள்வாரி உறுதிப்படுத்தலொன்று இடம்பெறவில்லை என்றும், நடைமுறையில் திணைக்களத்திற்கு எழும் தேவைகளுக்கு அமைவாக அதனை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | முறையான பெறகை வழிமுறைகளிலிருந்து விலகியமையின் அடிப்படையில், நிறுவப்பட்டுள்ள முறைமைக்கு வீணாகச் செலவிட நேர்ந்த தொகைக்குத் தொடர்புடைய பொறுப்புக்கூற வேண்டியவர்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், காணப்படும் குறைபாடுகளைச் சீரமைத்துச் சொத்தைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.12 தலைப்பு 561 - மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**1.5.12.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 02(IV) ஆம் பிரிவு மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், முதன்மை மருத்துவப் பராமரிப்பு அலகுகள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள், உயிர் மருத்துவப் பொறியியல் அலகு மற்றும் கடுகன்னாவ பயிற்சி நிலையம் ஆகியவற்றின் பதவியணியினருக்கு கைவிரலடையாளப் பதிவு இயந்திரங்கள் மூலம் நேரத்தை உறுதிப்படுத்தாமல், மீளாய்வாண்டில் ரூபா 3,170,638,901 மேலதிக நேர மற்றும் விடுமுறை தினப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | வைத்தியசாலைகள் உட்பட இந்நாட்டிலுள்ள எந்தவொரு சுகாதார நிறுவனத்திலும் விரலடையாளப் பதிவு இயந்திரங்கள் தொழிற்படவில்லை என்பதுடன், வருகைப் பதிவேடுகளின் மூலம் வருகை மற்றும் வெளியேறல் நேரங்களை உறுதிப்படுத்தி மேலதிக நேர மற்றும் விடுமுறை தின் படிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாகச் நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.12.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சேவையைத் விட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்கள் ஒப்பந்தத்தை மீறியமையினால், அறவிடப்பட வேண்டிய ரூபா 3,959,212 தொகையானது அறவிடப்பட்டிருக்கவில்லை. | தண்டப் பணத்தைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தம்புள்ளை மாவட்ட ஆதார வைத்தியசாலையில் சேவையை விட்டுச் சென்ற தாதியர் / குறைநிரப்பு மற்றும் துணை மருத்துவச் சேவையைச் சேர்ந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,686,285 தண்டப் பணத் தொகை அறவிடப்படாமல் 2026 பெப்ரவரி 09 ஆம் திகதி வரை 01 வருடம் முதல் 04 வருட காலம் வரை கடந்திருந்தது. | கொடுப்பனவுகளைச் செய்யுமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.12.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் முதன்மை மருத்துவப் பராமரிப்பு அலகுகளில் 2025 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலத்தில், 396 வகையான மருந்துகளைச் சேர்ந்த 3,892,161 மருந்துகள் பல்வேறு காரணங்களினால் காலாவதியாகியிருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 29,977,842 ஆகக் காணப்பட்டது. மேலும், கண்டி மாவட்டத்தின் மேற்கூறப்பட்ட சுகாதார நிறுவனங்களில், பெறுமதியை அடையாளங்காண முடியாத 18 வகையான மருந்துகளைச் சேர்ந்த 445,438 மருந்துகள் காலாவதியாகியிருந்தன. | தற்போது வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் மருந்து முகாமைத்துவமானது “ஸ்வஸ்தா“ மருந்து முகாமைத்துவத் தொகுதியின் மூலம் இடம்பெறுவதனால், மருந்துகள் காலாவதியாவது குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளதுடன், மருந்துகள் காலாவதியாவதற்கு உத்தியோகத்தர்களின் ஏதேனும் அலட்சியம் அல்லது கவனமின்மை காரணமாயிருந்தால் அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாகத் தேவையான எதிர்வு நடவடிக்கைகளை எடுப்பது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | விசாரணைகளை நடாத்தி, பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விரைவாக எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.12.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் பொது சுகாதார | சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்களை உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளில் | முறையான அங்கீகாரமின்றிச் செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| பரிசோதகர்களுக்குத் தமது கடமைகளுக்காகச் சம்பளம், படிகள் மற்றும் களக் கடமைகளுக்காக 18 நாட்களுக்கான மாற்றீடு செய்யப்பட்ட பிரயாணச் செலவுப் படிகளை வழங்குவதற்குக் கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக மொத்தமாக ரூபா 3,663,787 தொகையானது எரிபொருள் படியாக உள்ளூராட்சி மன்றங்களினால் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு ஆளுநரின் அல்லது வேறு யாதொரு முறையான அங்கீகாரமுமின்றிச் செலுத்தப்பட்டிருந்தது. | ஈடுபடுத்துவது தொடர்பில் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதம் குறித்துப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தெளிவூட்டப்பட்டுள்ளனதுடன் எரிபொருள் படிகள் வழங்கப்படுவதாயின் கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும், இரட்டிப்பாகாத வகையில் அதிகபட்ச நாட்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்துத் இணைந்த படியைச் செலுத்துவது பொருத்தமானது என உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் அனைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பல்வேறு படிகளைச் செலுத்துவதற்கு முன்னர் அதற்கான முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.12.5 வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் சுகாதார உபகரணங்களில் வர்ணம் பூசுவதற்காகத் தவறாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,114,905 தொகையானது 2019 மே 09 ஆம் திகதி மத்திய மாகாண பிரதம செயலாளரினால் அத்தொடர்புடைய பொறுப்புக்கூற வேண்டிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுள் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தமாக ரூபா 1,345,482 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனையின் பிரகாரம் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,787,605 தொகையானது அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் ஒரு உத்தியோகத்தர்யிடமிருந்து ரூபா 1,327,300 அறவிடப்பட வேண்டியதாக உள்ளது என்றும், அத்தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப் பட்டுள்ளதாக . | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2016 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் சம்பளம் தயாரித்தலில் சம்பளக் கடமைகளை மேற்கொண்ட இரண்டு உத்தியோகத்தர்களினால் தங்களது மற்றும் தமக்கு நெருங்கியவர்களின் 14 தனிப்பட்ட வங்கிச் கணக்குகளுக்கு ரூபா 51,961,083 | இதுவரை அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 3,922,781 ஆகும் என்பதுடன், மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ரூபா 49,115,857 ஆகும். நிதிப் பிரமாணம் 104 அறிக்கைகளின் அடிப்படையில் சிவில் வழக்கைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளுக்காகப் பிரதம | மிகை அறவீடு செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையும், வங்கிச் கணக்கு இலக்கங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1,077,550 தொகையுமாக மொத்தமாக ரூபா 53,038,638 தொகை தவறாகப் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன், அப்பணத்தில் மேலும் ரூபா 49,115,857 தொகையானது அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயலாளரினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் டீ 62101/21 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலாவது உப அட்டவணையின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 05 ஆகும் என்பதுடன், தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 20 பேர் என்வும் | |

### 1.5.12.6 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **அ)** ரூபா 70 மில்லியன் மதிப்பீட்டில் 2021 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட, வில்கமுவ பிரதேச வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு அலகையொன்றை அமைக்கும் திட்டத்திற்காக, 2022 ஆம் ஆண்டில் ரூபா 14.5 மில்லியனுக்குரிய வேலைப் பகுதிகள் மட்டுமே நிறைவு செய்யப்பட்டு இத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதாக . | திட்டத்தை நிறைவுசெய்து எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.12.7 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஒதுக்கீட்டில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 27,897,425 செலவில் நிர்மாணிக்கப்பட்டு, லக்கல பிரதேச வைத்தியசாலைக்குக் கையளிக்கப்பட்டிருந்த பிணவறை, ரூபா 49,552,886 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உணவகக் கட்டடம் மற்றும் 8 அறைகளைக் கொண்ட புதிய அறுவைச்சிகிச்சைக் கூடக் கட்டடத்தின் 02 அறைகளைத் தவிர ஏனைய அனைத்து அறைகளும் பயன்படுத்தப்படாமல் 08 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகவும், வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விடுதி வளாகத்தின் சுமார் 8,928 சதுர அடி பரப்பளவைக் கொண்ட சிறுவர் மற்றும் மகப்பேற்று நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 02 விடுதிகள் 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகவும் விளைவற்றுக் காணப்பட்டதுடன், 05 அறைகளைக் கொண்ட அனைத்து வசதிகளுடைய சமையலறைக்குரிய கட்டடமும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார முறைமைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலை உட்பட 11 பிரதேச வைத்தியசாலைகள், 4 முதன்மை மருத்துவப் பராமரிப்பு அலகுகள் மற்றும் 4 சுகாதார மருத்துவ அத்தியட்சகர் அலுவலகங்களை ஒரு கொத்துத் தொகுதியாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், இச்சுகாதார நிறுவனங்கள் 20 இற்காக USD 188,551.8 அல்லது ஏறத்தாழ ரூபா 60,567,420 பெறுமதியான 382 கணினிகள் 2023 நவம்பர் மாதத்தில் சுகாதார அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டுச் சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இக்கணினிகள் கிடைத்து 2 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், Open MRS வேலைத்திட்டம் தொழிற்படுத்தப் படாமையினால் வைத்தியசாலைகளின் பல்வேறு இடங்களில் இக்கணினிகள் | இச்செயற்திட்டம் நிறுவப்பட்டு வருவதாக | செயற் திட்டத்தைச் செயற்படுத்தி உபகரணங்களை ப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செயலிழந்து காணப்படுவதுடன், அவற்றின் உத்தரவாதக் காலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலும் சிக்கல்கள் காணப்பட்டன.

.

**1.5.13 தலைப்பு 561 – மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அலுவல்கள் தொடர்கபான திணைக்களம்**

**1.5.13.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைததுவ தீர்மானங்ளுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் சட்டத்தின் 22 ஆம் பந்தி | அனாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின் பேரில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சிறுவர்களுக்கு இருப்பிட வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குதல் போன்ற பணிகளுக்காக நடாத்திச்செல்லப்படும் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு படுத்துதல் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகிய பணிகளுக்காக யாதேனுமொரு நிதி மூலங்கள் மூலமாகவோ அல்லது நன்கொடைகள் மூலமாகவோ பெறப்படும் பணம் அல்லது நிதியினை ஆணையாளர் பயன்படுத்த முடியும் என்றபோதிலும், அதற்கு முரணாகச் சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படாத தன்னார்வ அமைப்புகளினால் நடாத்திச் செல்லப்படும் 09 சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களின் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா | சிறுவர்கள் மற்றும் முதியவர்களைத் தங்கவைப்பதற்குத் தேவையான போதுமான இடவசதி திணைக்களத்திடம் இல்லாதிருப்பதுடன், ஓர் ஊக்குவிப்பு செயற்பாடாக இவ்வாறான பராமரிப்புப் பணிகளுக்காக அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றதாக | சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 55,411,364 ஆன மாகாண சபை நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. | |

**1.5.14 தலைப்பு 570 – மத்திய மாகாண வீதிகள் அபிவிருத்தி அமைச்சு**

**1.5.14.1 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு ரூபா 9,673,700 தொகையைப் பயன்படுத்தி 09 நீர்மின் நிலையங்களை நிறுவியிருந்த போதிலும், 6 முதல் 14 வருட காலப்பகுதிக்குள் அம் மின் நிலையங்கள் செயலற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தன. | இது தொடர்பாகப் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கைத் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, இலங்கை நிலையான சக்தி அதிகாரசபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம், மின் நிலையங்கள் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள், மாகாண சபையின் மின்சாரப் பொறியியலாளர் மற்றும் சட்ட அதிகாரி ஆகியோர் உள்ளடங்கலாக நியமிக்கப்பட்டுள்ள குழுவைப் பங்கேற்கச் செய்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | செயலிழந்துள்ள நீர்மின் நிலையங்களை செயற்படும் நிலைமைக்கு கொண்டுவந்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.15 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை**

**1.5.15.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபைச் சட்டத்தின் 15(2)(i) ஆம் பிரிவிற்கமைய, மாகாணத்தினுள் அமைந்துள்ள 61 பேருந்து நிலையங்களில் 54 பேருந்து நிலையங்களின் சட்டப்பூர்வ உரிமையை அதிகாரசபை பெற்றுக்கொள்வதற்குத் தவறியிருந்தது. | 04 பேருந்து நிலையங்கள் கையேற்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பேருந்து நிலையங்களின் உரித்தை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளதாக | சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய வருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாத ரூபா 5,869,100 பாடசாலைப் பேருந்து வருமானம் மற்றும் ரூபா 2,762,500 பாடசாலைச் சேவை | தற்போது ஒழுங்குபடுத்தப்படாமையால் நிலுவை வருமானத்தைத் பதிவழிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானத்தைத் தீரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மிகை கட்டண மீதி ஆகியவற்றை அறவிடுவதற்கோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 17,640,702 கடை வாடகைத் தொகையில், 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாத கடை வாடகைத் தொகை ரூபா 10,986,850 ஆகக் காணப்பட்டது. | நிர்மாணிக்கப்படாத கடை அறைகளுக்கான நிலுவைகளைக் கணக்கிடாதிருப்பதற்கும், நீதிமன்றத் தீர்ப்புகளுக்கமையச் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிங்கள மற்றும் இந்து புத்தாண்டிற்காக 2025 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் நலன்புரிச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 04 மில்லியன் நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் முறையான அடிப்படை மற்றும் வழிமுறைகளைப் பயன்படுத்தாமல், ஒரு உலர் உணவுப் பொதிக்காக ரூபா 15,000 வீதம் நிதியுதவியாகப் பணமாக 212 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,180,000 செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் என்பதாக | சட்டவிரோதமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக முறையாக மற்றும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15.3 எதிர்பார்த்த நலன்களை பெற்றக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்த நகரங்களுக்கு இடையேயான பேருந்து இயக்க ஆலோசனைத் திட்டத்தின் கீழ் தினசரி அடிப்படையில் பயணிகள் போக்குவரத்து இயலளவு அதிகமான பயணிகள் பயணிக்கும் வீதிகள் மற்றும் பயணிக்கும் நேரங்கள் அத்துடன் அதிகமான பயணிகள் பயணிக்கும் பேருந்து நிறுத்தங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து, பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கும் நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கும் தேவையான வசதிகளை ETM இயந்திரங்களைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த | இக்கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதை நிறுத்துமாயின் ETM இயந்திரங்கள் மூலம் பயணச்சீட்டுகளை விநியோகிப்பதை மேற்கொள்ள முடியாது எனக் குறிப்பிடப்படுவதுடன், BMS தொகுதிக்குத் தகவல்கள் கிடைக்க மாட்டதெனவும் . | BMS தொகுதியின் மூலம் தகவல்களைப் பெற்றுத் தரவுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப் படுத்துவதற்காக, முதலாவது ஒப்பந்தத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் அவற்றின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| போதிலும், இத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் இத்தரவுத் தொகுதியிலிருந்து பேருந்து முகாமைத்துவத் தொகுதிக்கு (BMS) வழங்குவதற்கு இணைக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் குறிப்பிடப்பட்ட போதிலும், இத்தொகுதியின் மூலம் இதுவரை எவ்வித அறிக்கையோ அல்லது பகுப்பாய்வோ வழங்கப்படாமையினால் மென்பொருளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 9,257,385 தொகையும், SIM கட்டணப் பட்டியல்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 10,924,600 தொகையும் பயனற்றதாகியிருந்தது. | | செய்யப்பட்ட மாற்றங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.16 மத்திய மாகாண வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை

### 1.5.16.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| .(அ) | மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர் 32.70 பேர்ச் பரப்பளவைக் கொண்ட டெவோன் எஸ்டேட் காணியில் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் காணியானது 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி ஆண்டிற்கு ரூபா 360,000 தொகையில் வெளித் தரப்பொன்றிற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அக் குத்தகை ஒப்பந்தத்திற்கமைய 2021 ஆகஸ்ட் 25 ஆம் திகதி முதல் 2025 ஜனவரி 16 ஆம் திகதி வரை ஒரு நாளைக்கு ரூபா 5,000 வீதம் 1,241 நாட்களுக்குச் சேரவேண்டிய ரூபா 6,205,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன், தொடர்புடைய குத்தகைதாரர் ஒப்பந்தத்திற்கமையச் செயற்படாமையினால், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவைக் குத்தகை வாடகையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| .(ஆ) | கம்பளை பல்நோக்கு கட்டடமானது 2024 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் 15 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகைதாரரினால் ஒப்பந்தத்திற்கமையக் குத்தகை வாடகை செலுத்தப்படாமையினால் 2026 ஜூலை வரை கம்பளை வர்த்தகக் கட்டடத்தைக் குத்தகைக்கு விட்டதன் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய வாடகை வருமானம் மற்றும் குத்தகையாக ரூபா 43,497,688 அறவிடப்பட வேண்டியதாகக் | 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவைக் குத்தகை மட்டுமே ரூபா 12,195,930 தொகையை (VAT மற்றும் , SSCL சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி மற்றும் தாமதக் கட்டணங்கள் சேர்க்கப்படாமல்) அறவிடுவதற்கு 2026 ஜூலை 09 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | ஒப்பந்தத்தின் பிரகாரம் நிலுவைக் குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணப்பட்டது.

### 1.5.16.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொளப்பிஸ்ஸ பட்டியகம வீதி நிர்மாணத்திற்குரிய (2+000 -3+500km) 07 வேலைப் பகுதிகளுக்காக மத்திய மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் HSR வீதங்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,612,061 தொகையானது கூடுதலாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய ஒப்பந்த ஒப்படைப்பானது மொத்தப் பெறுமதியைக் கருத்திற் கொண்டே செய்யப்பட்டுள்ளதுடன், உருப்படி வாரியாக ஒன்றன்பின் ஒன்றாகப் பகுப்பாய்வு செய்வது சிக்கலாக உள்ளதாக | ஆண்டின் HSR வீதங்களின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.16.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டிற்காக 2025 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் ஒப்பந்தச் சேவைகள் (1411) செலவினப் விடயத்தின் கீழ் நலன்புரிச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் நிதியிலிருந்து, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் முறையான அடிப்படை மற்றும் வழிமுறைகளைப் பயன்படுத்தாமல், ஒரு பரிசுப் பொதிக்காக ரூபா 9,977 வீதம் 580 பொதிகளுக்காக ரூபா 5,786,660 செலவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்திச் செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டவிரோதமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.16.4 நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத, கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான வட்டபுலுவ தேவி வீதியில் பக்கச்சுவர் ஒன்றை அமைப்பதற்காக, அப்பக்கச்சுவரானது மாகாண வீதி அபிவிருத்தி | தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் தலைப்பின் கீழ் ஆரம்ப விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவினால் ஆரம்ப விசாரணை அறிக்கை பொது முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு | தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபைக்குச் சொந்தமான நித்தவெல வீதியின் பக்கச்சுவர் எனப் போலித் தகவல்களைச் சாத்தியவள ஆய்வறிக்கையில் உள்ளடக்கி, அதனை அங்கீகரித்த பின்னர் மதிப்பீடுகளைத் தயாரித்து ரூபா 7,620,577 பெறுமதியில் தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டு, ஒப்பந்தகாரருக்குப் பக்கச்சுவரின் ஒரு பகுதியை அமைப்பதற்காக ரூபா 2,480,258 தொகையானது மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்க மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து எதிர்காலத்தில் கணக்காய்வுக்குத் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வேண்டியதுடன், தொடர்புடைய பணத்தைக் கண்டி மாநகர சபையிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2007 ஜனவரி 18 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வலப்பனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் 116.32 கிலோமீற்றர் அளவிலான மாகாண வீதிகளைப் பராமரிப்பதற்காக ராகலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்குப் பொறுப்பளிக்கப் பட்டிருந்த நிலையில், அக் கிலோமீற்றர் அளவுக்குள் உள்ளடக்கப்படாத, வரையறுக்கப்பட்ட வலப்பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கான பிரவேச வீதி மற்றும் வளாகத்தைச் சூழவுள்ள சுமார் 65 மீற்றர் பகுதியைத் திருத்துவதற்காகப் பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 677,130 பெறுமதியான மூலப்பொருட்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் மனித உழைப்பு என்பன பயன்படுத்தப்பட்டிருந்தன. இத் திருத்த வேலைகள் 2025 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2025 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கணக்காய்வினால் பௌதீக களப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்ட போது சுமார் 460 சதுர மீற்றர் பரப்பளவிற்குக் கற்கள் பதிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டிருந்தமையும், சுமார் 170 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட பகுதியில் தார் பூசப்பட்டு மணல் பரப்பப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக அதிகாரசபையினால் மீளாய்வாண்டு நிறைவடையும் வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணைக்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக | ஆரம்ப விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.17 தலைப்பு 581 மத்திய மாகாண புடவை கைத்தொழில் திணைக்களம்

#### 1.5.17.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| மாகாண நிதி விதி 54.1.3 மற்றும் 54.1.6 | 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிதிக்கூற்றுக்களின் படி மொத்தப் பெறுமதி ரூபா 33,167,929 தொகையைக் கொண்ட சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்துடன் அதற்குள் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக விசாரணைகள் நிறைவு பெறாதிருந்த ரூபா 19,111,147 மீதியொன்றும் காணப்பட்டது. | 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக விசாரணைகள் நிறைவு பெறாதிருக்கும் ரூபா 19,111,147 மீதியானது இதுவரை தீர்வு செய்யப்படாதிருந்ததுடன், சில தொகைகள் தற்போது அறவிடப்பட்டு வருவதாகவும், நி.பி விசாரணைகள் நிறைவுபெறாத சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் மாகாண நிதி ஒழுங்கு விதிகளுக்கமையச் செயற்பட வேண்டியதுடன், தொடர்புடைய சேதங்கள் மற்றும் இழப்புகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.17.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024-2028 ஐந்தாண்டு ஒருங்கிணைந்த இடைக்காலத் திட்டத்தின் மூலம் திணைக்களத்தினால் 2030 ஆம் ஆண்டளவில் 03 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்ததுடன், அவ்விலக்குகளை அடைந்து கொள்வதற்கான பிரதான செயலாற்றல் சுட்டியாக (KPI) விற்பனை வருமானம் அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கமைய 2028 ஆம் ஆண்டாகும்போது விற்பனை வருமானத்தை ரூபா 126 மில்லியனாக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அடிப்படை ஆண்டான 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டளவில் மொத்த விற்பனை வருமானம் ரூபா 19.52 மில்லியனால் அதாவது 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், இவ்வாறு வருடாந்த விற்பனை வருமானம் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமையினால் எதிர்பார்க்கப்பட்ட நிலையான அபிவிருத்தி | பொருளாதார ஸ்திரமின்மை, இயற்கை அபாயங்கள் மற்றும் பேரழிவு நிலைகள், அனர்த்தம், கைத்தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகள் போன்ற காரணிகளினால் கடந்த ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அடையாளம் காணப்பட்ட பிரதான செயலாற்றல் சுட்டிகளை (KPI) அடைந்து கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இலக்குகளை அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

### 1.5.18 தலைப்பு 557 - மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

#### 1.5.18.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண கிராம அபிவிருத்திச் சாசனத்தின் I ஆம் பகுதியின் 08 (அ) மற்றும் IV ஆம் பகுதியின் 20 ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிராம அபிவிருத்தி அதிகார சபையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அடுத்து வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கிராம அபிவிருத்தி மாகாண சபையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண கிராம அபிவிருத்திச் சாசனத்தின் I ஆம் பகுதியின் 08 (அ) 41 ஆம் பிரிவு மற்றும் VII ஆம் பகுதியின் பொது ஏற்பாடுகளின் கீழான 40 மற்றும் 41 ஆம் பிரிவுகள் | சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்தின் கீழ் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் இயங்கிவந்த 1,742 கிராம அபிவிருத்திச் சங்கங்கள், 44 கிராம அபிவிருத்தி மகளிர் சங்கங்கள் மற்றும் 37 கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபைகள் ஆகியவற்றின் செயற்பாடுகளைத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதற்கு இணங்க் கணக்காய்வு செய்வதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக | சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் க் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.18.2 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை பெற்றக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாணத்தினுள் 38 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான புதிய கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவு செய்வதற்காகச் சான்றிதழ்களை விநியோகித்தல், கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார அமைப்புகளைப் பதிவுசெய்தல் மற்றும் அவற்றுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல், கிராம அபிவிருத்திச் சங்கங்களை மறுபதிவு செய்தல் மற்றும் பதிவுகளைப் | பிரதேச செயலகப் பிரிவுகளில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

புதுப்பித்தல், கிராம அபிவிருத்திச் சங்கங்களை மறுசீரமைத்தல் மற்றும் சங்கங்களின் நிதியை விடுவிப்பதற்கான தேவைக்காக மென்பொருளொன்றை உருவாக்குவதற்காக ரூபா 2,926,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் இம் மென்பொருளைச் தொழிற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இதன் மூலம் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

**1.5.19 தலைப்பு 557 - மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

**1.5.19.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1990 இன் 10 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சாசனத்தின் 43(1), 43(2) மற்றும் 43(3) ஆம் பிரிவுகள் | மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள நுவரெலியா மாவட்டத்தின் 96 சங்கங்களினாலும் மாத்தளை மாவட்டத்தின் 02 சங்கங்களினாலும் 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளுக்குரிய வருடாந்தக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாத்தளை மாவட்டத்தின் இரண்டு சங்கங்களுக்கும் கணக்குகளைச் சமர்ப்பிக்காமைக்கான காரணங்களைக் வினவிக் கடிதங்கள் அனுப்புதல் மற்றும் பணிப்பாளர் சபைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் ஏற்பட்ட தடைப்பாடு, பணியிலுள்ள உத்தியோகத்தர்களுக்குக் கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பான அறிவின்மை என்பன நுவரெலியா மாவட்டத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படாமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.19.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 10 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46 (1) ஆம் பிரிவின் படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு | ரூபா 47,194,931 மிகை அறவீடு தொடர்பாக மீண்டும் விடுவிப்பிற்குக் காரணங்களைக் வினவுதல், ரூபா | சங்கங்களின் மேற்பார்வை நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | அமைவாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத கண்டி மாவட்டத்தின் 03 சங்கங்களில் ரூபா 17,113,344 தொகையும், மாத்தளை மாவட்டத்தின் 02 சங்கங்களில் ரூபா 25,200,707 தொகையும், நுவரெலியா மாவட்டத்தின் 02 சங்கங்களில் ரூபா 43,372,637 தொகையும் என 07 சங்கங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தமான ரூபா 85,686,687 மிகை அறவீட்டு நடைமுறை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 16,587,711 மிகை அறவீட்டு நடுவர்களுக்கு முன்வைத்தல் மற்றும் ரூபா 21,904,045 மிகை அறவீட்டு சாட்டலுக்குரிய இழப்புக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | முறையான வகையில் மேற்கொள்ள வேண்டியதுடன், சங்கங்களில் காணப்படும் ஏனைய சிக்கல்கள் தொடர்பிலும் போதுமான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது இடருடன் கூடிய சங்கங்களாக அடையாளம் காணப்பட்டிருந்த கண்டி மாவட்டத்தின் 03 சங்கங்களிலிருந்து 2,962 வைப்பாளர்களுக்காக ரூபா 158,051,775 தொகையும், மாத்தளை மாவட்டத்தின் 08 சங்கங்களிலிருந்து 40,128 வைப்பாளர்களுக்காக ரூபா 1,105,372,627 தொகையும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் ஒரு சங்கத்திலிருந்து 690 வைப்பாளர்களுக்காக ரூபா 13,593,792 தொகையும் என 12 சங்கங்களிலிருந்து 43,780 வைப்பாளர்களுக்காகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ள வைப்புப் பணத்தின் பெறுமதி ரூபா 1,277,018,194 ஆகக் காணப்பட்டதுடன், இது தொடர்பாகத் திணைக்களத்தின் தலையீடு போதுமானதாக இருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றேன். . இச்சங்கங்களின் முகாமைத்துவப் பலவீனங்கள் காரணமாகத் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில், வைப்புகளை மீளக் கோரிய போது அவற்றை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. தற்போது இச்சங்கங்களினால் வைப்பாளர்களுக்குப் பணத்தை விடுவிப்பதற்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்பார்வை உத்தியோகத்தர்களின் மூலம் வைப்புகளை மீளச் செலுத்துவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும், நிதி மோசடிகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ள சங்கங்கள் தொடர்பாக மிகை அறவீட்டுச் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | சங்கங்களின் மேற்பார்வை நடவடிக்கைகளை முறையான வகையில் மேற்கொள்ள வேண்டியதுடன், சங்கங்களில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் போதுமான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**1.5.20 - மத்திய மாகாண கூட்டுறவு கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்**

**1.5.20.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தின் ([) விதி | கூட்டுறவு நிதியம் எனக் குறிப்பிடப்படும் நிதியத்திற்குப் பதிவு செய்யப்பட்ட அனைத்துச் சங்கங்களிலிருந்தும் அல்லது அத்தகைய சில சங்கங்களிலிருந்தும் பங்களிப்புப் பணத்தை | சாசனமொன்று தயாரிக்கப்பட்டுப் பிரதான அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாகாண சபைச் சட்டப் பிரிவுடன் | சாசனமொன்றையும் விதிக் கோவையொன்றையும் தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தலும் அந்நிதியத்தின் நிர்வாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இந்நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், கணக்காய்வு செய்தல் உள்ளிட்ட ஏனைய நிர்வாகப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகச் சாசனமொர்றோ அல்லது விதிக் கோவையொன்றோ தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கலந்துரையாடி அடுத்துவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத். | வேண்டும். . |

### 1.5.20.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாயவாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்குக் கண்டி மாவட்டத்தின் 159 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூபா 119,947,992 தொகையும், மாத்தளை மாவட்டத்தின் 229 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூபா 35,293,217 தொகையும், நுவரெலியா மாவட்டத்தின் 92 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூபா 47,744,090 தொகையும் என 480 சங்கங்களிடமிருந்து மொத்தமாக ரூபா 202,985,299 நிலுவைப் பங்களிப்புப் பணம் அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவைப் பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவைப் பங்களிப்புப் பணத்தை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஆண்டினுள் இயங்கிய 520 கூட்டுறவுச் சங்கங்களில் 160 சங்கங்கள் மாத்திரமே கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்குப் பங்களிப்புப் பணத்தை வழங்கியிருந்தன என்பதுடன், 360 சங்கங்கள் அதாவது 69 சதவீதம் இந்நிதியத்திற்குப் பங்களிப்புப் பணத்தை வழங்கியிருக்கவில்லை. அதற்குள் 2025 ஆம் ஆண்டில் இயங்கிய 22 செயற்பாட்டில் உள்ள் சங்கங்களின் 2025 ஆம் ஆண்டிற்குரிய பங்களிப்புப் பணமும் | தவணைக் கட்டணங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதுவரை அறவிடப்படாத மீதியை நீதிமன்றத் தண்டப்பணத்திலிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு முறையான வழிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.21 தலைப்பு 591 - மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

#### 1.5.21.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தினால் உள்நாட்டு உணவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கண்டி - நுவரெலியா பிரதான வீதியின் ரம்பொட பகுதியில் 2016 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 10 பேர்ச் காணித் துண்டில் "ரண்லிய ஹெல போஜுன்ஹல" அமைக்கப்பட்டு, அதில் உணவு விற்பனை நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், இக்காணித் துண்டு தனியார் தரப்பிற்குரியது எனப் பின்னர் உறுதி செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, காணியின் உரித்தைச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளாமல் அமைக்கப்பட்ட இவ்வுணவகத்தை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டமையால், அதனை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்ட ரூபா 4,354,494 தொகை அரசாங்கத்திற்கு இழப்பாக ஏற்பட்டுள்ளது. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையின் பேரிலேயே நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், தனியார் தரப்பினால் 2020 திசெம்பர் 24 ஆம் திகதிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு உரித்து கோரியிருந்தனர். காணியின் உரிமையாளரான தனியார் தரப்பினர் மாற்று நிலமொன்றில் ஹெல போஜுன்ஹலவை அமைப்பதற்கான செலவை ஏற்றுக்கொள்வதற்கு உடன்பட்டுள்ளனர். | நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணிகளின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், குறிப்பிட்ட செலவுக்கு ஈடாகும் வகையில் வேறு இடத்தில் உணவகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.22 தலைப்பு 592- மத்திய மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

#### 1.5.22.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்ளமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 05 வருட காலத்தில் மத்திய மாகாணத்தின் மொத்த பால் உற்பத்தியான 433,042,034 லீட்டர்களில் நுவரெலியா மாவட்டத்தின் பால் உற்பத்தி 297,367,139 லீட்டர்களாக இருந்ததுடன், இது மத்திய மாகாணத்தின் மொத்த பால் உற்பத்தியில் 68% ஆகும். இதற்கமைய, கண்டி மாவட்டத்தின் பால் உற்பத்தி 17% ஆகவும் மாத்தளை மாவட்டத்தின் பால் உற்பத்தி 15% ஆகவும் காணப்பட்டது. நுவரெலியா | சேவைத் தேவைகளுக்கு ஏற்ப பெருமளவிலான பண்ணைகளுக்கும் அரசாங்கக் கால்நடை மருத்துவ அலுவலகத்தின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், மத்திய மாகாணத்தின் பண்ணைகளில் 98% சிறிய அளவிலான பண்ணைகளாகும் என்பதாக. | மத்திய மாகாணத்தின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டத்தின் நுவரெலியா கால்நடை மருத்துவப் பிரிவில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மொத்த பால் உற்பத்தி 38,858,793 லீட்டர்களாக இருந்த போதிலும், அதில் 36,078,819 லீட்டர்கள் அதாவது 93 சதவீதமான அளவு தனியார் நிறுவனமொன்றான அம்பேவெல பண்ணையின் பால் உற்பத்தியாகக் காணப்பட்டது. | | |
| (ஆ) | மத்திய மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 2020 ஆம் ஆண்டில் பசு, எருமை மற்றும் ஆட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை 43,334 ஆக இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டு வரை அது 28,449 வரை 34 சதவீதத்தால் குறைந்திருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டில் 171,155 ஆக இருந்த விலங்குகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டாகும் போது 147,319 வரை 14 சதவீதத்தால் குறைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவைகள், சினைப் பரிசோதனைகள் மற்றும் பிறப்புகளின் எண்ணிக்கை முறையே 58,445, 29,223 மற்றும் 19,482 ஆக இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டாகும் போது அவை முறையே 45,751, 11,527 மற்றும் 15,415 ஆகக் குறைந்ததன் மூலம் முறையே 12,694, 17,696 மற்றும் 4,068 அதாவது 22 சதவீதம், 61 சதவீதம் மற்றும் 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. | மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கு பசு மற்றும் எருமைப் பண்ணைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையும், 2020-2022 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியும் காரணியாக அமைந்திருப்பதுடன், கால்நடை மருத்துவ அலுவலகங்களின் தொழில்நுட்ப ஊழியர்கள் சேவையிலிருந்து விலகியமையே செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவைகள் குறைவடைவதற்குக் காரணம் என்பதாக. | பண்ணைகளின் எண்ணிக்கை, விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.23.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாலின சமத்துவத்தை உள்ளடக்கிய சமூக பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் (EGSD) கீழ், கால்நடை மருத்துவ சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் ஹட்டன் கால்நடை மருத்துவ அலுவலகத்திற்கு ரூபா 4,152,631 செலவில் 787.44 சதுர அடி பரப்பளவைக் கொண்ட ஆய்வுகூட கட்டிடம் அமைக்கப்பட்டு, ஆய்வுகூட உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. இக்கட்டிடம் கட்டப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் ஆய்வக சேவைகள் நடாத்தப்படவில்லை என்பதுடன், பால் மற்றும் சாணம் சார்ந்த இரசாயனப் | கட்டிடம் மற்றும் உபகரணங்களைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | குறிப்பிட்ட திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வழங்கப்பட்ட 24 ஆய்வுகூட உபகரணங்களில் 16 உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.23 தலைப்பு 593- மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

#### 1.5.23.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மத்திய மாகாண நீர்ப்பாசனச் சாசனத்தின் II பகுதியின் 7(5) ஆம் பிரிவு | மாகாணப் பணிப்பாளரினால் மாகாணத்தினுள் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களினதும் பட்டியலொன்றைத் தயாரித்து அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கமையச் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டம் கட்டமாக நீர்ப்பாசனத் திட்டங்களை வர்த்தமானியில் பிரசுரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும், அதற்கமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட கமநல அபிவிருத்திப் பிரிவுகளில் இடப் பரிசோதனைகளை மேற்கொண்டு படிவங்கள் கிடைத்த பின்னர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | நீர்ப்பாசனச் சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீர்ப்பாசனத் திட்டங்களின் பட்டியலொன்றைத் தயாரித்து அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |